சுருக்கம்

பாதாள சாக்கடைத் திட்டம் – திண்டுக்கல் மாநகராட்சி – கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ள காலி இடத்தில் சமூக காடுகள் வளர்க்க பாதாள சாக்கடை கழிவுநீரை வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. – திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை

அரசாணை (நிலை) எண்.87

நாள் 18.10.2021
பிலவ வருடம், ஐப்பசி 01
திருவள்ளுவராண்டு, 2052
படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.128, ந.நி.(ம) கு.வ. துறை, நாள் 07.12.2017.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.25133/2016/ பாசாதி–1, நாள் 16.04.2018 மற்றும் 01.04.2019.

*******

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் திண்டுக்கல் மாநகராட்சி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் M/s டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு கூடுதலாக 1/3 பங்கு சுத்திகரிக்கப்பட்ட நீரினை வழங்கலாம் என ஆணையிடப்பட்டது. ஆனால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் அரசாணை (நிலை) எண்.68, ந.நி.(ம) கு.வ.துறை, நாள் 13.06.2014–ன் படி கட்டண அடிப்படையில் தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டது.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திண்டுக்கல் மாநகராட்சி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் M/s டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு கூடுதலாக வழங்க உத்தேசித்துள்ள 1/3 பங்கு நீரினை கட்டண அடிப்படையில் வழங்குவதற்கு

பதிலாக இலவசமாக வழங்க அரசாணை (நிலை) எண்.128, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 07.12.2017-ல் பத்தி 7(1)-ல் பின்வருமாறு திருத்தம் செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

"தற்போது கூடுதலாக வழங்க உத்தேசித்துள்ள 1/3 பங்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை M/s டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு இலவசமாக வழங்கலாம்".

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தது. ஆய்வுக்கு பின் கூடுதலாக 1/3 பங்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை M/s டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு இலவசமாக வழங்கலாம் என முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளதால் அவ்வரசாணையில் பத்தி 7-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் வரிசை எண் (i)-ஐ நீக்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதி (ந.நி. (ம) கு.வ.) துறையின் அ.சா.எண்.40406/2021, நாள் 27.09.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சிவ் தாஸ் மீனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-600 028.
ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல் - 624 001.
திருவாளர் திண்டுக்கல் டேனர்ஸ் இன்விரோ கன்ட்ரோல் சிஸ்டம் (பி) லிமிடெட்,
எண்.227/86-பி, மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல் -624 002.

நகல்:-

நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களின் நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை - 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை,
சென்னை - 600 009.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம்,
சென்னை-600 032.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்